**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII, Cr.P.C)
**SPLCC.No.18/2025 - PW-32**

| | |
|---|---|
| Name | திரு.சிவலிங்கம் |
| Father Name | வேணுகோபால் |
| Village /Area | பென்னகர் |
| Taluk | கலவை |
| Occupation | இளநிலைப் பொறியாளர் நிலை I (ஓய்வு) |
| Age | 67 |
| Religion | இந்து |
| Aadhar Card No. | 8647 7803 2577 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 13.11.2025.

**3 முதல் 10 மற்றும் 12, 15 எதிரிகள் ஆஜர். 11, 13 எதிரிகள் ஆஜர் இல்லை. பா.நா.சு.ச பிரிவு 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**
**முதல் விசாரணை –**

நான் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் இளநிலை மின் பொறியாளராக பணிபுரிந்து, பணிஓய்வு பெற்று, தற்போது பிள்ளையார் கோவில் தெரு, பென்னகர் கிராமம், கலவை வட்டத்தில் வசிக்கிறேன். நான் மாம்பாக்கம் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் இளநிலை பொறியாளராக 2000ம் ஆண்டு முதல் 2016ம் ஆண்டு வரை பணிபுரிந்தேன். குப்பிடிசாத்தம் கிராமம் மாம்பாக்கம் மின்வாரிய பிரிவிற்கு உட்பட்ட கிராமமாகும். கடந்த 2012ம் ஆண்டு வேலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். ஆய்வாளர் என்னிடம் 11 விவசாயிகளின் மின்மோட்டாரை மாற்றி புதிய மோட்டார் அளிக்கும் விண்ணப்பத்தினை என்னிடம் காண்பித்து அதில் இணைக்கப்பட்டுள்ள மின்வாரிய சான்றிதழ்கள் என்னால்

வழங்கப்பட்டதா, அதில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதா என்று கேட்டார். அதற்கு நான் அவைகளில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது அல்ல என்று சொன்னேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பெருமாள், த/பெ.கந்தசாமி விண்ணப்பத்துடன் உள்ள மின்சார இணைப்பு தொடர்பான சான்றிதழில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல, அதில் உள்ள முத்திரையும் என் அலுவலகத்தில் உள்ள முத்திரை அல்ல. அதே போன்று ராஜகோபால், குமார், எல்லம்மாள், ரமேஷ், பரசுராமன், பெருமாள் த/பெ.நாராயணசாமி, பெருமாள் த/பெ.திருநாதப்பிள்ளை, மணி, கோதண்டராமநாயுடு, வேணுகோபால் ஆகிய விவசாயிகளின் விண்ணப்பத்துடன் உள்ள மின்சார இணைப்பு தொடர்பான சான்றிதழிகளில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது அல்ல, அவைகளில் உள்ள முத்திரைகளும் என் அலுவலகத்தில் உள்ள முத்திரைகள் அல்ல. இந்த விவசாயிகளுக்கு மின்சார இணைப்பு தொடர்பான சான்றிதழ்களை நான்தான் வழங்கியிருக்க வேண்டும். இது சம்மந்தமாக என்னிடம் மாதிரி கையெழுத்துக்களை கிராம நிர்வாக அலுவலர் முன்பாக வாங்கினார்கள். அந்த மாதிரி கையெழுத்துக்களின் சான்றிட்ட நகல்தான் **அ.சா.ஆ.17** ஆகும். (அ.சா.ஆ.17ன் அசல் ஆவணம் இந்நீதிமன்ற SPLCC.19/2025 வழக்கில் உள்ளது). வழக்கு சம்மந்தமாக வேலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை 3 முதல் 11, 13, 14 எதிரிகள் தரப்பில் –**

மின்அழுத்தம் வேறுபாடுகளை குறைப்பதற்காகதான் அரசு பழைய மின்மோட்டார்களை மாற்றி புதியதாக குறைவாக மின்சார

தேவையை கொண்டு பயன்படுகிற மோட்டார்களை மாற்றும் திட்டம் கொண்டுவரப்பட்டது என்றால், சரிதான். நான் இது சம்மந்தமாக சான்றிதழ்கள் விவசாயிகளுக்கு வழங்கியுள்ளேன் என்றால், சரிதான். அந்த சான்றிதழ்கள் எந்த தேதியில், எந்த மாதத்தில், எந்த வருடத்தில் வழங்கப்பட்டது என்றால், எனக்கு ஞாபகமில்லை. என்னிடம் காண்பிக்கப்பட்ட 11 சான்றிதழ்கள் எந்த காலத்தில் கொடுக்கப்பட்டது என்றால், 2012ம் ஆண்டு வாக்கில் கொடுக்கப்பட்டது. அவ்வாறு சான்றிதழ் கொடுக்க வேண்டும் என்று எந்த அரசாணையும், வழிகாட்டுதல்கள் இல்லை என்றால், சரிதான். மின் நுகர்வை குறைப்பதாகற்காக பிறப்பிக்கப்பட்ட அரசாணை எண்.G.O.Ms.No.297, dated 24.09.2008யை நான் பார்க்கவில்லை என்றால், சரிதான். மேற்படி G.O. படி நான் சான்றிதழ் கொடுத்தால் தான் பழைய மின்மோட்டாரை மாற்ற முடியும் என இல்லை என்றால், சரிதான். இது சம்மந்தமாக என் மேல் அதிகாரிகள் எனக்கு எந்த உத்தரவும் கொடுக்கவில்லை என்றால், சரிதான். நான் பணியில் சேரும் போது போட்ட கையெழுத்துகளுக்கும், அதன் பிறகு என்னுடைய கையெழுத்துகள் சிறிது சிறிதாக மாறி வந்தது என்றால், நான் பணியில் சேரும் போது போட்ட கையெழுத்து மாதிரிதான் கையெழுத்துக்களை பணியில் இருந்து ஓய்வு பெறும் போதும் போட்டேன். 2012ம் ஆண்டில் நான் என் அலுவலகத்தில் போட்ட கையெழுத்துக்களை, சமகாலத்தில் போட்ட கையெழுத்துக்களை நான் ஆய்வாளரிடம் கொடுக்கவில்லை என்றால், சரிதான். நான் ஏற்கனவே விவசாயிகளுக்கு இது மாதிரி போட்ட சான்றிதழ் கையெழுத்துக்களையும் ஆய்வாளரிடம் நான் கொடுக்கவில்லை

என்றால், சரிதான். நான் எந்த கிராம நிர்வாக அதிகாரி முன்பு மாதிரி கையெழுத்து போட்டேன் என்றால், அந்த கிராம நிர்வாக அதிகாரி பெயர், அவர் எந்த ஊர் என்று எனக்கு நினைவில்லை. அந்த 11 சான்றிதழ்களும் 2012ம் ஆண்டில் கொடுக்கப்பட்டது என்று எவ்வாறு சொல்கிறேன் என்றால், அந்த சான்றிதழ்களில் 2012ம் ஆண்டு கொடுக்கப்பட்டதாக உள்ளது. நான் போலீஸ்க்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், அது சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்பட்ட அந்த 11 சான்றிதழ்களும் 2012ம் ஆண்டில் கொடுக்கப்பட்டது அல்ல என்றாலும், அவைகள் என்னால் 2008ம் ஆண்டில் கொடுக்கப்பட்டது என்றாலும், அது தவறு. போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றாலும், நான் ஆய்வாளரிடம் மாதிரி கையெழுத்துக்கள் போடவில்லை என்றாலும், அவைகள் ஜோடிக்கப்பட்டவைகள் என்றாலும், அது சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், அது சரியல்ல.

**குறுக்கு விசாரணை 12, 15 எதிரிகள் தரப்பில் –**

3 முதல் 11, 13, 14 எதிரிகள் தரப்பிலான குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக வழக்கறிஞர் தெரிவித்தார்.

**மறு விசாரணை –**

இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness and admitted by him/her to be correct.

M SELVAM

Principal District Judge, Ranipet
Digitally signed by M SELVAM
DN: cn=M SELVAM, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

Principal District and Sessions Judge,
Ranipet